# மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| MCOP.No.111/2022 | Date : 21.03.2025 | PW 1 |
|---|---|---|
| Name: சந்திரா | க/பெ. ரவிச்சந்திரன் | |

**2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்து சம்மந்தமாக போலிசில் யார் புகார் கொடுத்தார் என்றால் என் சித்தி மகன் வெங்கடேஷ் புகார் கொடுத்தார். துரைசாமி என்பவர் எனது தகப்பனார். நான் தாக்கல் செய்துள்ள முதல் தகவல் அறிக்கையை நான் படித்து பார்த்து உள்ளேனா என்றால் படித்து பார்க்கவில்லை. நான் 9 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் முதல் தகவல் அறிக்கையில் எனது தகப்பனார் துரைசாமி, வயது 75 என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவுசெய்யப்பட்டிருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் எனது தகப்பனார் துரைசாமிக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று போலிசார் பதிவு செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.9 ஆவணமான இறப்புச்சான்றிதழில் எனது தகப்பனாரின் வயது 77 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால்சரிதான். இந்த வழக்கு சம்மந்தமாக சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை ஆகியவற்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் தகப்பனார் மேற்படி விபத்தினால் தான் இறந்துபோனார் என்பதற்கு அவரது உடல் கூராய்வு அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ம.சா.ஆ.11 ஆவணமான குற்ற இறுதியறிக்கையில் கொடுங்காயத்திற்கான சட்டப்பிரிவு 338 இதச தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் 304(எ) இதச குறிப்பிடவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. எனது தகப்பனார் விபத்தினால் தான் இறந்து போனார். விபத்திற்கும் எனது தகப்பனாரின் இறப்பிற்கும் சம்மந்தம் இல்லாததால் இறப்பிற்கான நஷ்டஈடு பெற நான் அருகதையற்றவர்கள் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ ரசீதுகள் வழக்கிற்காக தயாரிக்கப்பட்டவை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை- இல்லை**

ஒம்/—சந்திரா

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/—எல்.கமலகண்ணன்,
சார்பு நீதிபதி,
மேட்டூர்.